ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப.,

ந.க.எண்.15996/2021/பஅ2 நாள்: 27.12.2021

பொருள்: பொதுப்பணிகள்- தமிழ்நாடு அமைச்சுப்பணி -கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி அலகு- ஈரோடு மாவட்டம்- பணியில் இருக்கும் போது காலமான சென்னிமலை வட்டாரம், பு.பாலத்தொழுவு ஊராட்சி செயலர் திரு.ஆர்.பூசான் என்பவரின் முதல் மனைவி திருமதி.சி.கிருஷ்ணவேணி, இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது - பணி வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடுதல் - சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்:18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020
2. அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:26.02.2021
3. அரசு இணை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் கடித ந.க.எண்: 6895/இ3/2021-5, நாள்:14.12.2021
4. சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) கடிதம் ந.க.எண்.1830/2017/ஆ4. நாள்.18.12.2017
5. திருமதி.சி.கிருஷ்ணவேணி, க.பெ.ஆர்.பூசான்,(லேட்) கண்டிக்காட்டு வலசு, துய்யம்பூந்துறை (வழி), ஈரோடு, என்பவரது விண்ணப்பம் , நாள்: 04.12.2017
6. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 2929/2018/பஅ2, நாள்.26.11.2019.

**உத்தரவு:**

பணியில் இருக்கும் போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டாரம், புஞ்சை பாலத்தொழுவு ஊராட்சி செயலாராகப் பணிபுரிந்து 12.09.2016 அன்று காலமான திரு.(லேட்)ஆர்.பூசான் என்பவரின் வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.சி.கிருஷ்ணவேணி என்பவருக்கு மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 06.12.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வருகிறார்.

2. பார்வை 2-ல் காணும் அரசாணைப்படி, 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித வித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்படும் எனவும், இவ்வாணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமாத்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. பார்வை 3-ல் காணும் அரசு கடிதத்தில், "இளநிலை உதவியாளர்" பதவிக்கான பணி நியமன அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) என்ற நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பணி நியமனம் வழங்கப்பட்டிருப்பினும், மாவட்ட ஆட்சித் தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்கலாம் என தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

4. பணியிடைக் காலமான அரசு ஊழியர் திரு.(லேட்)ஆர்.பூசான் என்பவரது பணியினை ஊராட்சி செயலர் நிலையில் 01.09.2006 மு.ப. முதல் வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது.

5. பார்வை 4-ல் வரப்பெற்ற முன்மொழிவு மற்றும் அசல் சான்றுகளின்படி, பணியிடைக்காலமான திரு.(லேட்)ஆர்.பூசான் என்பவரின் நேரடி வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.சி.கிருஷ்ணவேணி என்பவரால் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு 04.12.2017 அன்று விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அவரது பிறந்த தேதி 14.03.1978. பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரது வயது 39 ஆகும். அவர் இடைநிலைக் கல்வி இறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். தனியருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்களால் ஆட்சேபனை ஏதும் இல்லை என சான்று வழங்கப்பட்டுள்ளது. தனியரால் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குரிய உடற்தகுதி சான்று Civil Assistant Surgeon நிலைக்கு குறையாத மருத்துவ அலுவலரிடமிருந்து பெற்று சமர்பிக்கப்பட்டுள்ளது.

6. பார்வை -1ல் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி திருமதி.சி.கிருஷ்ணவேணி என்பவரது அசல் ஆவணங்கள் நன்கு ஆய்வு செய்யப்பட்டு தனியருக்கு 06.12.2019 மு.ப முதல் கருணை அடிப்படையில் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் பணி நியமனம் வழங்கி உத்திரவிடப்பட்டது. தனியர் பணி நியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில்,

ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் சேர்நத நாளான 06.12.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து உத்திரவிடப்படுகிறது. தனியரை பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற தகுதியுடையவராகிறார்.

7. கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட திருமதி.சி.கிருஷ்ணவேணி என்பவரின் பணி வரன்முறை செய்து உத்தரவிடப்பட்ட விபரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/ ஹெச்.கிருஷ்ணனுண்ணி
மாவட்ட ஆட்சித்தலைவர்,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.

//உண்மைநகல் உத்தரவுப்படி//

27/12/22

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
ஈரோடு மாவட்டம், ஈரோடு

27/12/22

**பெறுதல்:**

திருமதி.C.கிருஷ்ணவேணி,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
மொடக்குறிச்சி.
(அலுவலக தலைவர் மூலமாக)

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், மொடக்குறிச்சி

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-15

நகல்: பஅ2 இருப்புக் கோப்பிற்கு.

(உபரி -2).

---

ஊராட்சி ஒன்றியம்,
மொடக்குறிச்சி.

ந.க.எண்.31/2022/அ, நாள்:06.01.2022

"சார்வு செய்யப்படுகிறது"

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், மொடக்குறிச்சி.
6.1.2022

பெறுநர்

திருமதி சி. கிருஷ்ணவேணி,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
மொடக்குறிச்சி.